**தலைப்பு 328 – மனிதவலு மற்றும் தொழிற்துறை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனிதவலு மற்றும் தொழிற்துறை திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மனிதவலு மற்றும் தொழிற்துறை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இச்செலவின விடயங்களின் கீழ் நிதிச்செயலாற்றல் தகவல்கள், இறுதி திறைசேரிக் கணக்குகளுடன் ஒப்பிடும் போது வருடாந்த செலவினத்தில் ரூபா 24,318,095 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்படும் போது 2018 ஆம் ஆண்டின் போது இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாத்திரமே கருத்திற் கொள்ளப்பட்டது. 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள்2018 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் அதற்காக போதியளவு வழிகாட்டல் காணப்படவில்லை. |
| (ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் திணைக்கள தலைப்பிற்குரியதல்லாத 193 ஆம் செலவினத் தலைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 3,733,000 மற்றும் செலவினத்தலைப்பிற்குரிய ஆண்டின் செலவினமான ரூபா | - மேற்படி - | நிதிக் கூற்றின் ஏசீஏ2(ii) மாதிரியின் நிரல் இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள 328-1-1-2509 செலவினத் தலைப்பில் செலவினம் சரியாக நிரல் 6 இல் காட்டப்பட:டள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | |
|---|---|---|
| 2,878,052 தொகை அதனால் தலைப்பிற்குரிய சரியான செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நி.பி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் செலவிடப்பட்ட ரூபா 661,445 ஆன செலவினமும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றக்களைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு மாதமும் மீண்டும் பரீட்சிக்ககூடிய வகையில் பத்தகங்களில் சரிசெய்யப்பட்டுள்ளது. |

### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு செலவிடல் ரூபா 11,761,187 குறைத்து பதிவுசெய்யப்பட்டிருந்தது. நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளில் உள்ளடக்கப்பட்ட தொகையில் கிடைத்த ரூபா 11,221,976 ஆன வைப்பு பெறுவனவு மற்றும் ரூபா 2,536,919 ஆன அரச உததியோகத்தர்களின் முற்பண பெறுவனவு மீண்டுமொரு முறை வருமானம் அல்லாத பெறுவனவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியல்லாத ஏனைய பெறுவனவுகள் ரூபா 57,855,975 என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது..

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (இ) பந்தியின் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை நிறுவுவதற்காக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் |

| | |
|---|---|
| தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு காணப்பட்டால் மாத்திரம் பொறுப்புக்களுக்கு கடப்பாடொன்று ஏற்படுத்த முடியுமான போதும் திணைக்களத்தினால் நிதிஏற்பாட்டு தெகையை விஞ்சி மீளாய்வாண்டின் இறுதி ரூபா 4,631,438 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்களுக்கு கடப்பாடொன்று ஏற்படுத்த முன்னர் அதற்காக நிதி காணப்படுகின்றதா என்பது தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும் | மதிப்பீடு வரைவாக்கும் போது தேவைப்பாட்டின் பிரகாரம் நிதிஏற்பாடு சமர்ப்பிகக்பட்டும் அவை அங்கீகரிக்கம் போது போதயளவு நிதி வழங்காமையால் இவ்வாறு பொறுப்புக்களுக்கு கடப்பாடொன்று ஏற்படுத்த திணைக்களத்திற்கு நேர்ந்தது. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது 328-1-11404 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,492,676 ஆன பொறுப்பொன்று தீர்வுசெய்யப்பட்ட போதும் முன்னைய ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் அச்செலவின விடயத்தின் கீழ் பொறுப்புக்களாக ரூபா 2,746,338 மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டின் பொறுப்புக்களாக ரூபா 5,492,676 தொகை திறைசேரியிடமிருந்து 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டுநிதி வழங்க முடியாமையே அது பொறுப்புக்களாக காட்டவேண்டி ஏற்பட்டது. 2019 சனவரி மற்றும் பெப்ரரி மாதங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மனித வளங்கள் மற்றும் தொழில் ஈடுபாடு சாசனத்தின் 371 ஆவது அத்தியாயத்தன் பிரகாரம் இக்கொள்கை செயற்படுத்தும் பொறிமுறையின் பிரகாரம் குறித்த அமைச்சிடமிருந்து திட்டங்களைப் பெற்று 2018 ஆம் ஆண்டிற்காக ஒன்றிணைந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறானதிட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 08 அமைச்சுக்களிடமிருந்து மாத்திரம் செயல்நடவடிக்கைத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் திட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான விபரங்கள் இரண்டு அமைச்சுகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | தேசிய ரீதியில் முக்கியத்துவமான மனித வளங்கள் மற்றும் தொழில் ஈடுபாடு சாசனத்தினை செயற்படுத்தம் பொருட்டு கொள்கை செயற்படும் பொறுப்பு அரசிற்காக திணைக்களத்தினால் கையளிக்கப்பட்டுள்ள தால் அதனை செயற் படுத்துவதற்கு உரிய நடைமுறையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | திருத்திய கொள்கை 2017 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 2017–2019 மத்திய கால சட்டத்திற்கான உரிய திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்துவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் கடிதங்கள் 2017 இல் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் தொழில் அமைச்சின் செயலாளரால் 2018 ஆம் ஆண்டின் போது உரிய அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டம் 2018–2020 காலப்பகுதிக்காக நாளது வரையாக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 02 அமைச்சுக்களால் மாத்திரம் இது தொடர்பான செயன்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் போது தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில் ஈடுபாடு கொள்கை வழிகாட்டல் செயற்பாடு தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு கையளிப்பதற்கும் இக்கொள்கையை செயற்படுத்துவதற்குரிய தேசிய செயற்பாட்டு குழுவாக அந்த அமைச்சின் கீழ் வரும் தேசிய மனித வள அபிவிருத்தி பேரவையை பெயரிடுவதற்கும் முன்மொழியப்பட்டது. எனினும், அது தொடர்பாக உரிய அமைச்சிடமிருந்து பொறுப் பேற்றல் கிடைக்கவில்லை. ஆதலால் 2019 ஆம் ஆண்டின் போது இக் கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | | | தோன்றியுள்ளது. |
| (ஆ) | 2018 சனவரி மாதம் அளவில் மனித வலளங்கள் மற்றம் தொழில் கொள்கை தொடர்பான அமைச்சின் கூட்டிணைத்தல் வேலைகள் முடிவடைந்திருந்தன. எனினும் இக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவதற்காக தேவையாக இருப்பதாக குறிப்பிட்டு வெவ்வேறு அமைச்சுக்கள் இடமிருந்து கடிதங்கள் முன்வைக்கப்பட்ட போதும் அவர்களுக்கு அத்தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஆதனால் கொள்கையை செயற்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட அமைச்சுக்களுக்கு அது தொடர்பாக தெளிவாக விளங்கள் இல்லையென அவதானிக்கப்பட்டது. | - மேற்படி – | அமைச்சுக்களின் கொள்கையை செயற்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு கையளிப்பதற்கு உத்தியோகத்தர்கள் வேறுபடும் போது பதிலாளல் ஒருவருக்கு அச்செயற்பாடு கையளிக்கப்பட்டு எமது திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டியது அவசியமில்லை. தொடர்புடைய அமைச்சின் மூலம் அது இடம் பெறாமல் இருப்பதால் இந் நிலைமை உருவாகியிருந்தது. அத் தகவல்கள் நாளது வரையாக்குவதற்குரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவன மட்டத்தில் மேற்கொள்ள வேண்டியதுடன் அது தொடர்பான அலுவலக நடைமுறையின் பிரகாரம் எமது திணைக்களத்திற்கு அவர்கள் அறிவிக்க வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5 மிலலியன் நிதிஏற்பாடு செய்யப்பட்ட போதும் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் செயற்பாட்டு பகுப்பாய்வொன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதற்காக வெளிக்கள துறை உத்தியோகத்தர்களுக்காக ரூபா 4,925,000 இற்கு 47 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கபப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போதும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக 70 மடிக்கணனிகள் ரூபா 6,971,300 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | முறைமையைத் தயாரிப்பதற்கான நிதிஏற்பாடு வனைத்திறனான வகையில் திட்டமிட்டு பயன்படுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் பொது பெறுகை செயற்பாட்டின் பிரகாரம் ஒட்டு மொத்த திணைக்களத்திற்காக செயற்பாட்டு பகுப்பாய்வொன்று (BA study) மேற்கொள்வதற்கு நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்காக ICTA நிறுவனமும் முழு வழிகாட்டியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்கள் ஒதுக்கீடு செய்த பணத்திலும் பல மடங்கு அடிப்படையில் இருந்ததால் அச் சந்தர்ப்பத்தில் செயற்பாட்டு பகுப்பாய்வு செய்யப்படவில்லை மேலும், 2018 ஆம் ஆண்டில் நடுப்பகுதியில் இருந்து இதுவரை Google . doc மென் பொருள் உள்ளீட்டு பயன்பாடு முறையில் முறைமையொன்று அபிவிருத்தி செய்து பரீட்சிர்த்த மட்டத்தில் 10 மாவட்டங்களில் செயன் முன்னேற்ற பொழிப்பினை பிரதான அலுவலகத்திற்கு பெற்றுக் கொள்ளல் இடம் பெறுகின்றது. இது திரட்டிய MIS செயற் திட்டத்திற்காக ரூபா 117.74 |

| | | |
|---|---|---|
| | | மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு இடையே பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு தகவல் தொழில்நுட்பம் / கணனி போன்ற அலுவலக உபகரணங்கள் வழங்கு வதற்காக ரூபா 97.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பொது திறைசேரியால் 2017 ஆம் அண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 15 மில்லியனைப் பயன்படுத்தி இத் திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தருக்கு பரீட்சார்த்த மட்டத்தில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 70 மடிக் கணனிகளும் 47 கணனிகளும் வழங்கப்பட்டிருந்தன. |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றத.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் அமைச்சு மாற்றம் செய்யப்பட்டதால் மனிதவலு மற்றும் தொழிற்துறை கொள்கையை செயற்படுத்த முடியாமல் போனதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப் பட்டிருந்தது. அதற்காக திட்டமிடப்பட்ட ரூபா 1,750,000 பெறுமதியான தகவல் தொழில்நுட்ப முறையை மேம்படுத்துதல், கொள்கை முன்னேற்றம் மேற்பார்வை கையளிக்கப்பட்டுள்ள பிரிவில் (Monitoring Unit) பௌதீக அபிவிருத்தி கொள்கை செயன்முன்னேற்ற அறிக்கையிடல் (காலாண்டு /வருடாந்த) மற்றம் கொள்கைகளை செயற்படுத்தவுது தொடர்பாக அமைச்சின் செயலாளர்களின் மாநாடு களை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளை நடாத்த முடியாமல் போயிருந்தது. நிர்மாண ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 165,831,215 இற்குரிய மதிப்பீடு தயாரித்தல் கட்டமைக்கபபட்ட திட்டம் மற்றும் விரிவான திட்டத்தை தயாரிப்பதற்கு தேசிய பொறியியல் | மனிதவலு மற்றும் தொழிற்துறை கொள்கையின் தேசிய முக்கியத்துவம் கருதி அதனை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதும் கூட்டிணைப்பு உரிய கணனி முறைமைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனி சேவர் (Sever) பொருத்த மான வகையில் நிறுவு வதற்காக தேவைப்பாட்டு அடிப்படையில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டது. அச் செயற்பாட்டிற்காக உலக தொழிலாளர் அமைப்பின் நிதி அனுசரணை கிடைத்திருந்தது. மேலும் கணக்காய்வு ஐய வினா மூலம் குறிப்பிடப்பட்ட எதிர்வுகூறல் பெற்ற முடியாத காரணத்தின் பேரில் உரிய மாநாட்டினை நடாத்த முடியாமல் போனதுடன் அதன் மூலம் எஞ்சிய நிதி ஏற்பாடு வேறு செயற்பாடு களுக்காக பயன்படுத்தப் |

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூபா 1,602,094 தொகை 2018 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2019 மே மாதம் வரையில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | | பட்டது. இவ்வாண்டில் இறுதி மாதங்களில் இராஜதந்திர தரப்பில் காணப்பட்ட நிலைமை அடிப்படையில் அமைச்சின் செயற்பாட்டு பரப்பு மற்றும் கடமை கையளிப்பு சர்ச்சைக்குரியதாக இருந்தமையால் திட்டமிடப்பட்ட செயற்பாடு நிறைவேற்றப்படவில்லை. |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களை சேவை புரிவதற்காக பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலின் 3.4.3 பந்தியின் பிரகாரம் வழங்குனர் தெரிவுசெய்யப்படாமல் ஒரு நிறுவனத்தின் மூலம் மீளாய்வாண்டு முழுவதும் சகல ாகனங்களுக்குமான சேவைகள் ரூபா 492,934 தொகைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலில் திட்ட வட்டமாக காட்டப்பட்டுள்ள ஆலோசணைகள் மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டு பூராகவும் திணைக்களத்தின் சகல வாகனங்களையும் சேவை புரிவதற்காக ரூபா 992,934 செலவிடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் வாகன சேவை நடவடிக்கையில் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மனிதவலு மற்றும் தொழிற்துறை கொள்கையை செயற்படுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,335,000 பெறுமதியான கணனி வன்பொருட்கள் மற்றம் மென்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை. | திணைக்களத்தின் சொத்துக்களை விளைவற்ற வகையில் வைக்கப்படாமல் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிரேஷ்ட அமைச்சர்களின் அலுவலகத்தினால் இத்திணைக் களத்திற்கு கையளிக்கப்பட்ட கணனி மென்பொருட்கள் குறித்த செயற்பாட்டு பிரிவின் செயற் பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதும் அப்பிரிவிற்கு தேவைான பதவியணியினருக்காக அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் தனிணக்களத்தினால் கிடைத்திருக்கவில்லை. இதனால் குறித்த உபகரணங்கள் விளைவற்ற வகையில் காணப்பட்டன. எனினும் இதுவரை |

| | | | |
|---|---|---|---|
| | | | குறித்த உபகரணங்களிலிருந்து இப்பிரிவிற்கு தேவையான கணனி உபகரணங்கள் அளவினை வைத்துக்கொண்டு மேலதிக உபகரணங்கள் திணைக்களத்தின் வேறு பிரிவுகளுக்கும் மாவட்ட அலுவலகங்களின் பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. |

**4. நல்லாளுகை**

**4.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியப் படையணியை முறையபான தொழில்துறைக்கு தொடர்புபடுத்தல், புதிய தெழில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் தேசிய கொள்கைகள் மற்றும் ஆட்களின் திறமை மற்றும் இயலுமை என்பவற்றுக்கு இணங்கும் வகையில் தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் தொழில்துறை வழிகாட்டல் என்பவற்றிற்கு பிரிவொன்று தாபிக்கப் பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இப்பிரிவின் மூலம் 773 நிகழ்ச்சித் திட்டங்கள் ரூபா 3,471,405 செலவினம் மேற் கொள்ளப்பட்டு நடாத்தப்பட்டி ருந்ததுடன் அதற்காக 23,365 நபர்கள் சமூகமளித்திருந்தனர். எனினும் அவர்களுக்கு இடையே சுயதொழிலுக்காக தொடர்புபட்ட நபர்கள் 25 மாவட்டங்களிலும் 2,753 பேராக இருந்ததுடன் அது 11.78 சதவீதமாக இருந்தது. இதனிடையே கொழும்பு மாவட்டத்தில் 31 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டி ருந்ததுடன் அதில் 1,478 பேர் சமூகமளித்திருந்தனர். அதில் 15 பேர் மாத்திரம் சுயதொழில் களுக்கு தொடர்புபட்டிருந்தனர். | திணைக்களத்தின் மூலம் பொது மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய சேவைகளை வினைத் திறனாக செயற் திறனாகவும் நிறை வேற்றுவதற்கு முடியுமான வகையில் சரியான மற்றும் நடைமுறை ரீதின வேலைத்திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். | இந்நிகழ்ச்சித்திட்டம் மூலம் வியாபாரங்களை எவ்வாறு ஆரம்பிப்பது, நடாத்திச் செல்வது எவ்வாறு செய்யும் வியாபாரத்தை எவ்வாறு வெற்றிகரமாக முன்கொண்டு செல்வது போன்ற தொடர்பாக நலனாலிகளுக்கு அறிவூட்டுதல் ஆரமபமாக செய்யப்பட்டுள்ளதுடன் அதனூடாக கருத்திற் கொள்ளக் கூடியளவில் சுயதொழில் புரிவோரை உருவாக்க கூடியதாக இருந்தது. அது சதவீதமாக கருதும் போது 11.78 ஆக காணப்படும் பொருளாதார நிலைமையின் கீழ் அது உயர் மட்டத்தில் வெற்றிகரமாக அடையக் கூடியதாக உள்ளதாக மேலும் அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | பொது மக்கள் சேவை நிலையங்கள் நாட்டின் 25 இலும் செயற்படுகின்றன. தொழில்களை எதிர்பார்த்திருப்போரை பதிவு | மேற்படி | நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது இந்நிலையங்களின் மூலம் |

| | | |
|---|---|---|
| செய்தல், வெற்றிட நிறுவனங்களை பதிவு செய்தல் தொழிலை எதிர்பார்த்து உள்ளோருக்கு அதற்கானக தொழிலில் ஈடுபடுத்துதல் அந்நிறுவனத்தின் பிரதான பணியாகும். 2018 ஆம் ஆண்டின் போது இந்நிலையத்தின் மூலம் தொழிலை எதிர்பார்த்துள்ளோரில் 121,016 பேர் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் மொத்த தொழிலில் ஈடுபடுத்தல் 12,807 ஆக இருந்தது. அது பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கையில் 10 சதவீமானதாக இருந்தது. | | பதிவுசெய்யப்பட்டுள்ள தொழில் எதிர்பார்த்து உள்ளோரின் எண்ணிக்கை 131,631 ஆக இருந்ததுடன் தொழிலில் ஈடுபடுத்தல் 1,471 ஆக இருந்தது. தொழில் எதிர்பார்த்துள்ளோருக்கு தொழில்சந்தைாத நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கூடிய முன்னுரிமை வழங்குவதற்கும் அந்த எதிர்பார்ப்போருக்கு தொழில் வழிகாட்டல் சேவை வழங்குவதன் மூலம் திட்டவ்ட்டமான தொழில்களுக்காக ஈடுபடுவதற்கும் தொழிலில் ஈடுபடுதல் தாமதமானோருக்கு தொழில் சந்தை தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவது உட்பட வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது அந்த பதிவுசெய்யப்பட்ட தொழில் எதிர்ப்பார்புடைவர்களின் தொழில் ஈடுபடுத்தல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தது. |

## 5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 மற்றும் 3 ஆம் பந்திகளின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் அச்சுற்றறிக்கை யின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினர் நிபுணத்துவம் இனங் காணப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படும் போது இத்திணைக் களத்திலிருந்து ஒன்றிணைந்த சேவைக்காக உள்ளீர்க்கபட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக சில சிக்கலான விடயங்கள் காணப்பட்டன. (இந்த உத்தியோகத்தர் களுக்காக உத்தேச ஆட்சேர்ப்பு நடைமுறை வழிகாட்டி இல்லாமையால்) அவ்வாறே குறித்த தகவல்களை சேகரிக்கும் போது ஒவ்வொரு சேவை வகைக்குரிய திணைக்களத்தின் பிரிவுகளை உரித்தாக கொண்டு இச்செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எமது திணைக்களத்தில் கூடுதலானோர் வெளிக்கள |

உதவியோகத்தர்கள் ஆவர். மொத்த ஊழியர்களின் 548 வெளிக்கள ஊழியர்களாவர்) அக இருந்ததுடன் அவர்கள்மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக சிறிது காலம் தேவைப்படுகின்றது. அதன் பிரகாரம் தகவல்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வருவதுடன் உரிய மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக தயவுடன் அறிய தருகின்றேன்.